DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.92/2018**

Deposition of Witness PW-1

2019 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ம் தேதியன்று அரசு சாட்சி ஆக விசாரிக்கப்படுவர். 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6 (2) பிரிவுகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

பெயர் - J. ஜெயநிவாசன் வயது

தந்தை பெயர் தொழில்

கிராமம் தாலூக்கா

மாவட்டம்

<u>முதல் விசாரணை தொடர்ச்சி:</u>-

நான் கடந்த 07.08.2019 ம் தேதி முதல் விசாரணை கூறியபோது வழக்கு சம்பந்தமாக எனக்கு அடையாளம் தெரிந்த நபர்களை குறிப்பிட்டு கூறினேன். அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகாத 23 ம் எதிரியான மோகன்பாபு இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார். இந்த வழக்கின் செயலில் குற்ற செயல் புரிந்துள்ளதால், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியிடம் குற்றத்தை ஒப்புக்கொண்டு பொது மன்னிப்பு வேண்டினேன். அதற்கு அவர் நீதிமன்றத்தில் கூறுமாறு என்று கூறிவிட்டார். எனவே நீதிமன்றத்தில் அனைத்து உண்மைகளையும் வாக்குமூலமாக சமர்ப்பித்துவிட்டேன்.

1 ம் எதிரிக்கான கு.வி.

இந்த வழக்கில் நான் சம்பந்தப்பட்டுள்ளேன் என்ற விவரம் எனக்கு

எப்போது தெரியும் என்றால் 12.08.2012 ம் தேதி தெரியும். நான் கைதுயான தேதி 21.08.2012 ஆகும். இதற்கு இடையில் முன்ஜாமீன் மனு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. என்னை ஜாமீன் எடுத்த வழக்கறிஞரிடமோ அல்லது இலவச சட்டம் மையத்திலோ, Approver ஆவது பொறுத்து ஏதேனும் சட்ட அறிவுரை பெற்றேனா என்றால் இல்லை. 18.08.2012 ம் தேதி போலீஸ்சார் என்னை அழைத்து சென்று பிறகு 21.08.2012 ம் தேதி தான் என்னை கைது செய்து, 22.08.2012 ம் தேதி தான் என்னை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார் என்றால் சரிதான். எனவே 18.08.2012 ம் தேதியிலிருந்து 21.08.2012 ம் தேதி வரை நான் காவல் நிலையத்தில் தான் வைக்கப்பட்டு இருந்தேனா என்றால் இல்லை. திருவல்லிக்கேணியில் ஒரு லாஜ்ட்சில், போலீஸ்சாரின் மேற்பார்வையில் வைக்கப்பட்டு இருந்தேன். சம்பவ நடந்த எவ்வளவு நாட்கள் கழித்தபிறகு, ஈரோடு குற்றவியல் நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சுமார் 11 மாதம் கழித்து, அதாவது 23.9.2013 ம் தேதியில் வாக்குமூலம் கொடுத்தேன். நான் அப்ரூவராக மாறுவதற்கு போலீஸ் ஏதேனும் உதவி செய்தார்களா என்றால் நான் கொடுத்த ஸ்டேட்மென்ட்டை அவர்கள் மனுவாக தயாரித்து கொடுத்தார்கள். அதை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் முதல் எதிரியின் பெயர் இல்லை என்றால் சரிதான். நான் மற்ற எதிரிகளுடன் சேர்ந்து செயலானது சட்ட விரோதம் என்று தெரிந்தே தான் செய்தேனா என்றால் வேலை கிடைத்துவிடும் என்ற எண்ணத்தில் செய்தேன்.

2,3 எதிரிகளுக்கான குறுக்கு விசாரணை

நான் நீதிமன்றத்தில் அப்ரூவராக மாறுவதற்கு தாக்கல் செய்த மனுவில் 2,3

எதிரிகளின் பெயர் இல்லை என்றால் சரிதான். நான் மற்ற எதிரிகளுடன் சேர்ந்து செயலானது சட்ட விரோதம் என்று தெரிந்தே தான் செய்தேனா என்றால் வேலை கிடைத்துவிடும் என்ற எண்ணத்தில் செய்தேன்.

11,14, 15 மற்றும் 21 எதிரிகளுக்கான குறுக்கு விசாரணை

எனக்கு இ மெயில் முகவரி, பேஸ் புக் வசதி ஆகியன உள்ளனவா என்றால் எனக்கு உள்ளது. பேஸ்புக் கணக்கு தொடங்கப்பட வேண்டுமென்றால் எனது இமெயில் முகவரி கொடுக்க வேண்டுமென்றால் சரிதான். இமெயில் முகவரி தொடங்குவதற்காக எனது தொலைபேசி எண்ணை கொடுக்க வேண்டுமென்றால் சரிதான். எனது தகப்பனார் ரயில்வே பாதுகாப்பு படையில் உதவி ஆய்வாளராக உள்ளார். நான் பிறந்தது வளர்ந்தது எல்லாம் சென்னையில் என்றால் சரியல்ல. நான் பிறந்தது பாண்டிச்சேரி, அதன்பின்னிட்டு எனது தகப்பனாருக்கு எங்கெங்கெல்லாம் பணி மாறுதலானதோ அங்கெல்லாம் நான் சென்றேன். நான் எப்போது இருந்து எப்போது வரை சென்னையில் இருந்தேன் என்றால் 1996 முதல் 2014 வரை அங்கிருந்தேன். எனவே சென்னையைப் பற்றி எனக்கு நல்ல அறிமுகம் உள்ளது என்றால் சரிதான். சென்னையில் படித்த காலத்தில் நான் ஏதேனும் பணி செய்தேனா என்றால் காபிடே கடையில் சூப்பரவைசராக பணியிலிருந்தேன். குரூப் 2 தமிழ்நாடு தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்விற்கு நான் விண்ணப்பித்தாக சொல்லப்படும் நிலையில் அதனுடைய விண்ணப்பிப்பதற்கான இறுதி தேதி என்ன வென்றால் 13.7.2012 ஆகும். குரூப் 4 தமிழ்நாடு தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்விற்கு நான் விண்ணப்பித்தாக சொல்லப்படும் நிலையில் அதனுடைய விண்ணப்பிப்பதற்கான இறுதி தேதி என்ன வென்றால் 28.5.2012 ஆகும். எதிரி

ஸ்ரீதர்ராஜ் சொன்னதின்பேரில் நான் குரூப் 2 தேர்விற்கு விண்ணப்பித்திருந்தேனா என்றால் விண்ணப்பித்திருந்தேன். 20 வது எதிரி ஸ்ரீதர்ராஜ் குரூப் 2க்கான விண்ணப்பம் தாக்கல் செய்ய வேண்டி என்ன தேதியில் என்னிடம் கூறினார் என்றால் தேதி சொல்லமுடியாது, தேதி சரியாக ஞாபகமில்லை. குரூப் 4க்கு விண்ணப்பித்தபோதே குரூப் 2க்கும் விண்ணப்பித்துவிட்டேன். குரூப் 2 தேர்விற்கான விண்ணப்பம் தாக்கல் செய்வதற்காக தொடக்க நாள் எது என்றால் 13.6.2012. குரூப் 4 தேர்விற்கான விண்ணப்பம் தாக்கல் செய்வதற்காக தொடக்க மற்றும் முடிவு நாள்கள் முறையே 27.4.2012 மற்றும் 28.5.2012 ஆக உள்ள நிலையில், குரூப் 2 தேர்விற்காக விண்ணப்பம் தாக்கல் செய்வதற்காக தொடக்க தேதியே 13.6.2012 ஆக உள்ள நிலையில் குரூப் 2 மற்றும் குரூப் 4 ஆகிய இரண்டிற்கும் ஒரே நாள் விண்ணப்பித்ததாக நான் கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. 11.8.2012ம் தேதி இரவு 10.30 மணிக்கு எதிரி ஸ்ரீதர்ராஜ் என்பவர் என்னை செல்போனில் தொடர்பு கொண்டதாக எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளதைப் பொறுத்து, ஏற்கனவே நீதித்துறை நடுவர் எண் 2, மற்றும் இந்த நீதிமன்றம், மற்றும் நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றத்திலும் நான் கொடுத்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நீதித்துறை நடுவர் எண் 2, மற்றும் இந்த நீதிமன்றம், மற்றும் நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றத்தில் ஆகியவற்றில் நான் கொடுத்த வாக்குமூலத்தில் சுமார் 12 மணி நேரத்திற்கு முன்பாக மோகன்பாபு என்பவரிடமிருந்து போன் வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மோகன்பாபு என்பவருக்கு ஸ்ரீதர்ராஜ் என்பவர் எந்த நேரத்தில் வினாத்தாள் கொடுத்ததாக நான் நீதித்துறை நடுவர்

எண் 3 நீதிமன்றத்தில் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேலும் எதிரி ஸ்ரீதர்ராஜ் வினாத்தாள் மற்றும் அதற்குரிய விடைகளை எங்கிருந்து பெற்றார் என்ற விபரமும் நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஸ்ரீதர்ராஜ் என்பவரின் செல்போன் நம்பர் என்னவென்று நீதித்துறை நடுவர் எண் 2, மற்றும் இந்த நீதிமன்றம், மற்றும் நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். மோகன்பாபு என்பவர் என்னை எங்கிருந்து அழைத்தார் என்று நீதித்துறை நடுவர் எண் 2, மற்றும் இந்த நீதிமன்றம், மற்றும் நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலங்களில் நான் கூறவில்லை என்றால் சரிதான். மோகன்பாபு என்பவர் எனக்கு போன் செய்தபோது, அவர் எங்கிருந்து தொலைபேசியில் அழைக்கிறார் என்ற விபரத்தை நான் கேட்டேனா என்றால் இல்லை. மோகனபாபுவிடம் ஸ்ரீதர்ராஜ் எங்கிருந்து வினா மற்றும் விடைத்தாள் பெற்றார் என்ற விபரத்தை நான் கேட்டேனா என்றால் இல்லை. சென்னை, அண்ணா நகர் என்பது சுமார் 5 கிமீ நிலப்பரப்பு சுற்றளவு கொண்ட பகுதி என்றால் சரிதான். மேலும் கிழக்கு அண்ணா நகர், மேற்கு அண்ணா நகர் என தனித்தனியாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் திருமங்கலம், சாந்திநகர், ஸ்கைவாக், வெஸ்ட் அண்ணா நகர், ஈஸ்ட் அண்ணா நகர் ஆகிய இடங்களிலும் ரவுண்டானாக்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட ரவுண்டானாக்களில் எந்த ரவுண்டானாவில் எதிரி மோகன்பாபு என்னை காத்திருக்கும்படி கூறினார் என்று குறிப்பிட்டு, நீதித்துறை நடுவர் எண் 2, மற்றும் இந்த நீதிமன்றம், மற்றும் நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம் ஆகியவற்றில் நான் கொடுத்த

வாக்குமூலங்களில் கூறவில்லை என்றால் சரிதான். இரவு 10.30 மணிக்கு மோகன்பாபு எனக்கு தொலைபேசியில் கூறியதின்படி அண்ணா நகரில் இருந்து ராயப்பேட்டைக்கு எந்த வழியாக சென்றேன் என்றால் சரியாக ஞாபகமில்லை. அன்றைய தினம் அண்ணா நகரிலிருந்து ராயப்பேட்டை செல்வதற்கு எவ்வளவு நேரமானது என்றால் சுமார் 40 நிமிடங்கள் இருக்கும். அன்றைய தினம் அண்ணா நகரிலிருந்து ராயப்பேட்டை செல்வதற்கு என்ன வாகனத்தில், யார் யார் சென்றோம் என்றால் என்னுடைய அப்பாச்சி பைக்கில் நான் மட்டும் சென்றேன். என்னுடன் மோகன்பாபுவின் தம்பி விக்னேஷ், விக்கி என்ற ஒரு நபருடன் வேறு ஒரு இரு சக்கர வாகனத்தில் என்னுடனேயே அண்ணா நகரிலிருந்து ராயப்பேட்டை வந்தார். ராயபேட்டையில் இரவு நேரத்தில் என்ன காரணத்திற்காக சென்றேன் என்ற விபரத்தை எனது பெற்றோரிடம் தெரிவித்தேனா என்றால் இல்லை. சென்னை ராயப்பேட்டை என்பதும் பெரிய சுற்றளவு கொண்ட பகுதி என்றால் சரிதான். அது எவ்வளவு சுற்றளவு கொண்டது விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. ராயப்பேட்டை என்பது ஒரு சட்டமன்ற தொகுதி என்றால் சரிதான். அண்ணா நகரிலிருந்து ராயப்பேட்டைக்கு சுமார் 15 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். அந்த 15 கிமீ தூரமும் பெருநகர சாலை வழியாகத் தான் செல்லப்படும் என்று சொன்னால் சரிதான். அண்ணா நகரில் எத்தனை மணிக்கு கிளம்பி ராயப்பேட்டைக்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் 11.20 மணியளவில் அண்ணா நகரில் கிளம்பி, 12.15 மணியளவில் ராயபேட்டை சென்றடைந்தோம். 12.15 மணி என்பது 12.8.2012 ம் தேதியின் அதிகாலை 00.15 மணி என்று சொன்னால் சரிதான். ராயபேட்டையில் குறிப்பாக நான் எந்த இடத்திற்கு

வரவழைக்கப்பட்டேன் என்ற விபரத்தை நீதித்துறை நடுவர் எண் 2, மற்றும் இந்த நீதிமன்றம், மற்றும் நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம் ஆகியவற்றில் நான் கொடுத்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். ராயப்பேட்டைக்கு குறிப்பாக எந்த இடத்திற்கு சென்றேன் என்ற விபரத்தையும் மேற்படி நான் 3 நீதிமன்றங்களில் கொடுத்த வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். ராயப்பேட்டையில் எந்த இடத்தில் ஸ்ரீதர்ராஜ் மற்றும் 21 வது எதிரி ஞானசேகரன் ஆகியோர் வந்தனர் என்ற விபரத்தையும் மேற்படி நான் 3 நீதிமன்றங்களில் கொடுத்த வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். மாறாக மேற்படி 3 நீதிமன்றங்களிலும் நான் கொடுத்த வாக்குமூலங்களில் 4.00 மணிக்கு அவர்கள் இருவரும் ராயப்பேட்டை வந்திருந்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ராயப்பேட்டையில் உள்ள விக்னேஷின் சித்தி வீட்டிற்கு எதிரிகள் ஸ்ரீதர்ராஜ் மற்றும் ஞானசேகர் ஆகியவர்கள் வந்ததாக ஏற்கனவே நான் வாக்குமூலம் கொடுத்த மேற்படி 3 நீதிமன்றங்களில் கூறவில்லை என்றால் சரிதான். விக்னேஷ் என்பவர் அண்ணா நகரிலிருந்து, ராயப்பேட்டைக்கு வேறு ஒரு இரு சக்கர வாகனத்தில் வந்தார் என்ற விபரத்தை ஏற்கனவே நான் வாக்குமூலம் கொடுத்த மேற்படி 3 நீதிமன்றங்களில் கூறவில்லை என்றால் சரிதான். எதிரி ஸ்ரீதர்ராஜ் என்பவரோடு, எதிரி ஞானசேகரன் என்பவர் அதிகாலை 4,00 மணிக்கு வந்திருந்ததார் என்று என்னால் சொல்லப்படும் தகவல் 12.8.2012 ம் தேதி அதிகாலை 4.00 மணி என்று சொன்னால் சரிதான். 24 வது எதிரி சதீஷ்குமார் என்பவர் சேலத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். 24 வது எதிரி சதீஷ்குமாரின் கல்வித்தகுதி 10 வகுப்பு மட்டுமே என்று சொன்னால் சரிதான். 10 ம் வகுப்பு மட்டுமே கல்வி தகுதி

கொண்ட நபர் குரூப் 2 தேர்விற்கு கல்வி தகுதி அற்றவர் என்றால் சரிதான். விக்னேஷின் சித்தி வீட்டின் விலாசம் இதுவரை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். குரூப் 2 தேர்விற்கு கல்வி தகுதியற்ற ஒரு நபர், ஸ்ரீதர்ராஜ், மோகன்பாபு என்பவருடன் சேர்ந்து என்னை ராயப்பேட்டையில் என்னை சந்தித்தார் என்று சொல்லப்படும் விபரங்கள் உண்மைக்கு புறம்பானது, பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. அங்கு சந்தித்த 24 வது எதிரி சதீஷ்குமார், என்னையும், எதிரி மோகன்பாபு, ஸ்ரீதர்ராஜ் ஆகியோரையும் 21 வது எதிரி ஞானசேகரனின் மாமா வீட்டிற்கு அழைத்துச் சென்றார் என்று கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. எதிரி ஞானசேகரின் மாமா வீடு எங்கு உள்ளது என்றால் வில்லிவாக்கம் ஆகும். ராயப்பேட்டையிலிருந்து வில்லிவாக்கம் சென்றதாக நான் ஏற்கனவே 3 நீதிமன்றங்களில் கொடுத்த வாக்குமூலங்களிலும், இந்நீதிமன்ற முதல் விசாரணையிலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். ராயப்பேட்டையிலிருந்து, வில்லிவாக்கம் என்பது எவ்வளவு தூரம் என்றால் சுமார் 40 நிமிடங்களிலிருந்து 50 நிமிட நேரத்தில் பயணம் செய்யக்கூடிய தொலைவு ஆகும். ராயப்பேட்டையில் 2.45 மணியிலிருந்து 3.00 க்குள் கிளம்பினோம். ராயப்பேட்டையிலிருந்து வில்லிவாக்கத்திற்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் 3 இரு சக்கர மோட்டார் வாகனத்தில் கிளம்பினோம். ராயப்பேட்டையிலிருந்து வில்லிவாக்கத்தில் உள்ள ஞானசேகரனின் மாமா வீட்டிற்கு சென்றபோது 12.8.2012 ம் தேதி அதிகாலை 4.00 மணி இருக்கும். 21 வது எதிரி ஞானசேகரன் என்பவர் அதற்கு முன்பு, முன்பின் அறிமுகம் இல்லாத நபர் என்று சொன்னால் சரிதான். எதிரி ஞானசேகரன் யார் என்று அடையாளம் காட்ட போலீசாரால் நான்

எப்போதாவது அழைக்கப்பட்டேனா என்றால் இல்லை. வில்லிவாக்கத்தில் உள்ளதாக சொல்லப்படும் எதிரி ஞானசேகரன் மாமா வீட்டு விலாசத்தை என்னால் சொல்ல முடியாது என்று சொன்னால் சரிதான். எதிரி ஞானசேகரன் மாமா வீட்டு விலாசத்தை நான் ஏற்கனவே 3 நீதிமன்றங்களில் கொடுத்த வாக்குமூலங்களிலும் மற்றும் இந்நீதிமன்ற முதுல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி ஞானசேகரனின் மாமா வீட்டிற்கு அருகில் உள்ள முக்கிய அடையாளங்கள் (Land Marks)என்னால் குறிப்பிட முடியுமா என்றால் இ்ல்லை. போலீசார் எப்பொழுதும் அந்த இடத்திற்கு புலன் விசாரணை சமயத்திலிருந்து அழைத்துச் செல்வில்லை என்றால் சரிதான்.

போலீசார் என்னை விசாரித்தபோதும் வில்லிவாக்கத்தில் உள்ளதாக சொல்லப்படும் எதிரி ஞானசேகரன் மாமா வீட்டிற்கு அருகில் உள்ள வீட்டின் அடையாளங்கள் மற்றும் விலாசம் ஆகியவற்றை போலீசார் என்னை இரண்டு முறை விசாரித்தபோதும் நான் கூறவில்லை என்றால் சரிதான். அன்று நாங்கள் எதிரி ஞானசேகரின் மாமா வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டோமா என்றால் இல்லை. வில்லிவாக்கம் வீட்டிற்கு 100 மீட்டர் தூரத்தில் நான் நின்று கொண்டிருந்தேன். என்னுடன் 24 ம் எதிரி சதீஷ்குமாரும் இருந்தார். வில்லிவாக்கம் வீட்டிலிருந்துது 100 மீட்டர் தொலைவில் நான் தள்ளி நின்றிருந்தேன் என்ற விபரத்தை ஏற்கனவே நான் 3 நீதிமன்றங்களிலும் கொடுத்த வாக்குமூலத்திலும், காவல் துறையினரிடம் நான் கொடுத்த வாக்குமூலங்கள் மற்றும் இந்நீதிமன்ற்முதல் விசாரணை ஆகிய எவற்றிலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அப்போது எதிரி சதீஷ்குமாரும் என்னுடன் இருந்தார் என்ற விபரத்தை நான் காவல் துறை விசாரணையில் சொல்லவில்லை

என்றால் சரிதான். 100 மீட்டர் தள்ளி எவ்வளவு நேரம் நான் நின்று கொண்டிருந்தேன் என்றால் சுமார் 45 நிமிடங்கள் அதாவது 12.8.2012 ம் தேதி அதிகாலை 4.45 மணி வரை நின்று கொண்டிருந்தேன். அந்தத 45 நிமிடங்களும் நான் என் வீட்டிலுள்ள யாரையும் தொடர்பு கொள்ளவில்லை என்றால் சரிதான். அன்று இரவு முழுவதும் நான் எங்கே இருந்தேன் என்ற விபரத்தையும் எனது வீட்டில் யாரும் கேட்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் எதிரி ஸ்ரீதர்ராஜ் எத்தனை மணிக்கு எனது இமெயில் ஐ.டீ. கேட்டார் என்றால் 12.08.2012 ம் தேதி அதிகாலை 4.15 மணி ஆகும். நான் எனது இ.மெயில் ஐ.டீ.யை எதிரி ஸ்ரீதர்ராஜிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரி ஸ்ரீதர்ராஜ் என்னிடம் அப்போது எனது இமெயில் முகவரியை கேட்டு நான் அதை தர மறுத்தேனா என்றால், என்னுடைய மெயில் ஐடி எதுவும் அவர் கேட்கவில்லை. வில்லிவாக்கத்திலிருந்து எக்மோர் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் பெருநகர சாலை வழியாகவே சுமார் 10 கிமீ தூரம் இருக்கும். எத்தனை மணிக்கு வில்லிவாக்கத்திலிருந்து புறப்பட்டோம் என்றால் 12.8.2012 ம் தேதி அதிகாலை 4.50 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டேன். 12.08.2012 அதிகாலை 4.50 மணிக்கு வில்லிவாக்கத்திலிருந்து புறப்பட்டு எத்தனை மணிக்கு எக்மோர் வந்து சேர்ந்தேன் என்றால் அதிகாலை 5.10 மணிக்கு வந்துவிட்டேன். வில்லிவாக்கத்திலிருந்து அதிகாலை 4.50 புறப்பட்டதாக சொல்லப்படும் தகவல் ஏற்கனவே நான் 3 நீதிமன்றங்களிலும் கொடுத்த வாக்குமூலங்களிலும் இந்நீதிமன்ற முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 22.8.2012 அன்று ஈரோடு நகர காவல் நிலைய போலீசார் என்னை முதல் முதலாக விசாரித்தனர் என்றால் சரிதான். 18.8.2012 முதல் 21.8.2012 வரை

நான் சட்டவிரோதமாக காவலில் வைக்கப்ப்ட்டிருந்தேன் என்றால் சரிதான். 18.8.2012 முதல் 21.8.2012 வரை என்னை எத்தனை முறை எனது தகப்பனார் சந்தித்தார் என்றால் என்னை அவர் சந்திக்கவே இல்லை. 18.8.2012 முதல் 21.8.2012 வரை காவலில் வைக்கப்பட்டிருந்த விபரம் எனது தகப்பனாருக்கு தெரியுமா என்றால் இல்லை. 18.8.2012 முதல் 21.8.2012 வரை எந்த எந்த காவல் உயர் அதிகாரிகள் என்னை சந்தித்தனர் என்றால் ஈரோடு எ.டி.எஸ்.பி. என்னை சென்னை லாட்ஜில் என்னை சந்தித்தனர். 18.8.2012 முதல் 21.8.2012 வரை நான் சட்ட விரோத காவலில் வைக்கப்பட்டது குறித்து எனது தகப்பனார் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு நீதிப்பேராணை தாக்கல் செய்தாரா என்றால் இல்லை. 18.8.2012 முதல் 21.8.2012 வரை எனக்கு உணவு காவல் துறையினர் வாங்கி கொடுத்தனாரா என்றால் என்னிடமிருந்து பணம் பெற்று காவல் துறையினர் வாங்கி கொடுத்தனர். என்னிடம் அப்போது இருந்த பண தொகையை காவல் நிலையத்தினர் பெற்றுக்கொண்டனரா என்றால் சரிதான். என்னிடம் பணத்தொகை பெற்றுக்கொண்டதற்காக 18.8.2012 முதல் 21.8.2012 வரை எந்த ஆவணங்களிலும் காவல் துறையினர் கையொப்பம் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். 18.8.2012 முதல் 21.8.2012 வரை எத்தனை முறை என்னை காவல் துறையினர் விசாரித்தனர் என்றால் இரண்டு முறை விசாரித்தனர். அப்போது நான் கூறியதை போலீசார் எழுதிக் கொண்டு கையொப்பம் பெற்றனர். 18.8.2012 முதல் 21.8.2012 க்கு இடைப்பட்ட காலத்தில் என்னை காவல்துறை இயக்குநரிடம் என்னை அழைத்துச் சென்றனரா என்றால் இல்லை. 18.8.2012 முதல் 21.8.2012 வரை எத்தனை காவலர்கள் என்னுடன் இருந்தனர் என்றால் 3 காவலர்கள், ஒரு அதிகாரி என்னுடன்

இருந்தனர். 18.8.2012 முதல் 21.8.2012 வரை என் அப்பா காவல் துறையில் பணியாற்றுகிறார் என்ற விபரத்தை ஈரோடு, எ.டி.எஸ்.பி. தெரிந்து கொண்டார் என்றால் சரிதான். எ.டி.எஸ்,பி. என்னை சந்தித்த தினம் 19.8.2012 ம் தேதி இரவு 11.00 மணிக்கு மேல் ஆகும். எ.டி.எஸ்.பி. என்னை சந்தித்து, விசாரித்து, வாக்குமூலம் பெற்று, என்னிடம் கையொப்பம் பெற்ற பிறகு என் தகப்பனாரை எ.டி.எஸ்.பி. அங்கு வரவழைக்கவில்லை என்றால் சரிதான். 22.8.2012 அன்று காவல் துறையில் என்னால் கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தில், “பின்னர் கடந்த 11.8.2012 ம் தேதி இரவு 10.30 மணிக்கு மோகன்பாபு, எனக்கு போனில் தகவல் சொன்னார் எனவும், அதன்பேரில் ராயப்பேட்டை சிக்னலுக்கு வந்தேன் எனவும், அங்கிருந்த மோகன்பாபு மற்றும் ஸ்ரீதர்ராஜ் டி.என்.பி.எஸ். குரூப் 2 ஜி.கே. கேள்வித்தாள் மற்றும் பதிலை அன்று விடியற்காலை கொடுத்தார்கள், நான் அதனை படித்துப்பார்த்துவிட்டு திரும்ப கொடுத்துவிட்டேன்" எனவும் சொல்லவில்லை என்றால் சரிதான். 22.8.2012 ம் தேதிக்கு முன்பாக ஈரோடு எ.டி.எஸ்.பி. என்னை விசாரித்தபோதும் மேற்கண்ட தகவலை நான் சொல்லவில்லை.

எதிரிகள் தரப்பு வழக்குரைஞர் கேட்டுக் கொண்டதின்பேரில் குறுக்கு விசாரணை இத்துடன் நிறுத்தி வைக்கப்பட்டது.